பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிப் பிரிவு

செயற்சாதனை அறிக்கை - 2019

வருமானத் தலைப்பு 155

உள்ளடக்கம்

அத்தியாயம் 01 – நிறுவன விவரம்/நிறைவேற்றுச் சுருக்கம்	3-9
அத்தியாயம் 02 – முன்னேற்றம் மற்றும் எதிர்காலப் பார்வை	10-15
அத்தியாயம் 03 – ஆண்டிற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றல்	16-23
அத்தியாயம் 04 – செயலாற்றல் குறிகாட்டிகள்	24
அத்தியாயம் 05- நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதிலுள்ள செயலாற்றல் (SDG)	25-27
அத்தியாயம் 06 – மனிதவள விவரம்	27-29
அத்தியாயம் 07– இணக்க அறிக்கை	30-38

அத்தியாயம் 01 - நிறுவன விவரம்.˙.நிறைவேற்றுச் சுருக்கம்

1.1. அறிமுகம்

இவ்வறிக்கையானது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள், தேசிய நிகழ்ச்சிகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் குறித்து வகுக்கப்பட்ட கொள்கைகள், ஒவ்வொரு பிரிவின் கீழும் வழிகாட்டுதல்கள் மற்றும் திருத்தப்பட்ட நிலையியற் சட்டங்கள் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனம் என்ற விடயப்பரப்பின் கீழ் வரும் உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் 2019.01.01 முதல் 2019.12.31 வரையிலான காலப்பகுதிக்கான அபிவிருத்தித் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீகரீதியான செயலாற்றலனின் விரிவான தொகுப்பாகும்.

அதன்படி, உள்ளூர் அதிகாரசபைகளின் (மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள்) கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களை நிறைவேற்றுதல், உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் மாகாண சபைகள் மற்றும் நிரல் அமைச்சுக்களின் தொடர்பு ஆகியன இன்னும் பலனளிக்கும் வகையில் வழிகாட்டப்பட முடியும். மேலும், அனைத்து மாகாண சபைகளின் ஒத்துழைப்புடன் நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிதியளிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டன.

ரூபா. 20,182.75 மில்லியன் பெறுமதியான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட திட்டங்கள் 2019 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டன. சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகள், மாகாண மற்றும் கிராமப்புற வீதிகள், கிராமப்புற பாலங்கள், உள்ளூராட்சி அதிகாரசபை அலுவலகங்கள், பல்நோக்கு கட்டிடங்கள், வாராந்த சந்தைகள், சந்தைப்படுத்தல் கட்டடத்தொகுதிகள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் சிறுவர் பூங்காக்கள், மருத்துவ சிகிச்சை மத்திய நிலையங்கள், ஆயுர்வேத மத்திய நிலையங்கள், பேருந்துத் தரிப்பிடங்கள், வடிகால் அமைப்புக்கள், குடிநீர் திட்டங்கள், மற்றும் மயானங்கள் போன்றவற்றின் பௌதீகக் கட்டமைப்பு மேம்படுத்தல்கள் அந்த செயற்றிட்டங்களில் குறிக்கப்பட்டுள்ளன. மனிதவள மேம்பாட்டுத் துறையில் இலங்கை உள்ளூராட்சி ஆளுகை நிறுவகம் மூலம் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரிகளுக்கு பயிற்சித் திட்டங்களை வழங்குவதில் தொடர்ந்து ஆதரவளித்தது.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனத் துறையின் வழிகாட்டுதல்கள் மற்றும் கொள்கைகளை நிறைவேற்றுவது பாராட்டத்தக்க முயற்சியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி, பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மாகாண சபைகளுக்கு கலப்பு உறுப்பினர் விகிதாசார முறையை அறிமுகப்படுத்துவது போன்ற மிக முக்கியமான கொள்கைகளை நடைமுறைப்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, சட்டவாக்கத்தை வரைவுசெய்வதற்காக சட்டவரைஞரினூடாக அமைச்சரவைக்கு ஆற்றுப்படுத்தப்பட்டு, உள்ளூராட்சி நிறுவனங்களின் கணக்குகளுக்கு நேரடியாக முத்திரைக் கட்டணங்களைச் செலவு வைப்பதற்கான சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்தும் சட்டமூலம் வரையப்பட்டு, 2019 ஆம் ஆண்டில் மாகாண சபைகளின் ஒப்புதலைப் பெறுவதற்காக மாகாண சபைகளுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளன.
மேலும், இவ்வறிக்கையானது 2019 ஆம் ஆண்டில் அமைச்சின் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரிவின் செயலாற்றல் குறித்த அதிகமான விவரங்களை முன்வைக்கும்.

முடிவில், 2019 ஆம் ஆண்டில் அமைச்சின் நோக்கங்களையும் செயற்பாடுகளையும் நிறைவேற்றுவதற்காக வழிகாட்டிய கௌரவ அமைச்சர், கௌரவ இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் அமைச்சின் செயலாளர், இராஜாங்க அமைச்சின் செயலாளர், அமைச்சின் மேலதிக செயலாளர்கள், பிரதான செயலாளர்கள் மற்றும் மாகாணங்களின் உள்ளூராட்சி ஆணையாளர்கள், நிறுவனப் பணிப்பாளர்கள் மற்றும் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட திட்டங்களின் பெறுமதிமிக்க பங்களிப்புகள் சிறப்பித்துக் காட்டப்பட்டுள்ளது.

1.2. நிறுவனத்தின் தொலைநோக்கு, செயற்பணி, நோக்கங்கள்

தொலைநோக்கு

மாகாண மற்றும் உள்ளூர் ஆளுகைக்கு வலுவூட்டல்

செயற்பணி

பயனுள்ள, ஒத்துழைப்புமிக்க, புத்தாக்கமிகுந்த மற்றும் பொறுப்புக்கூறக்கூடிய சமூகங்களில் உயர் தரமான சேவைகளை வழங்கும் ஒரு மாகாண மற்றும் உள்ளாட்சி அமைப்பாகவிருத்தல்.

நோக்கங்கள்

- ❖ மாகாண மற்றும் உள்ளூராட்சி முறையை அபிவிருத்தி செய்வதற்குக் கொள்கைகளை வகுத்தல்.
- ❖ மாகாண மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் தங்கள் அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்கும் சேவைகளை வழங்குவதற்கும் உள்ள திறனை மேம்படுத்துதல்.
- ❖ பொது நலன்களை உறுதிசெய்து மாகாண மற்றும் உள்ளூராட்சி அமைப்பில் பிரதிபலிப்புச்செய்தல்
- ❖ மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் பிற அமைப்புகளுடனான கூட்டாண்மை மூலம் அனைத்து சமூகங்களினதும் மேம்பாட்டிற்காக செயல்படுதல்.

1.3 பிரதான செயற்பாடுகள்

Scope and the Functions

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 2018.12.28 திகதிய 2103/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி வெளியிட்டுள்ள புதிய அமைச்சுக்களின் விடயப்பரப்புக்கள் மற்றும் செயற்பாடுகளின்படி மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிப் பிரிவின் கீழ் வரும் கடமைகள் மற்றும் செயல்பாடுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன .

- கொள்கைகள், நிகழ்ச்சிகள் மற்றும் செயற்றிட்டங்களை உருவாக்குதல்; மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்கள், சட்டரீதியான நிறுவனங்கள் மற்றும் பொதுக் கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றின் பரப்பெல்லையில் வரும் விடயங்கள் தொடர்பாக செயல்படுத்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- மாகாண சபைகளுடன் தொடர்புடைய நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல்
- மாகாண சபைகளின் உறுப்பினர்கள், அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கு பயிற்சியளித்தல்.
- உள்ளூராட்சி அதிகாரசபைகளுடன் தொடர்பான அரசாங்க செயல்பாடுகள்.
- பொது பயன்பாடுகளின் அபிவிருத்திக்காக உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்குக் கடன் வசதிகளை வழங்குதல்.
- உள்ளூராட்சி அதிகாரசபைகளின் உறுப்பினர்கள், அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கு பயிற்சியளித்தல்.
- மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் நிர்வாகத்தின் அனைத்து அம்சங்களிலும் ஆராய்ச்சி நடத்துதல்.

1.4. நிறுவனக் கட்டமைப்பு

தயவுசெய்து இணைப்பு 1 இனைப் பார்க்கவும்

நிறுவனங்கள் /அமைச்சின் பிரதான பகுதிகள்

01. பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரின் அலுவலகம்
02. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சரின் அலுவலகம்
03. செயலாளரின் அலுவலகம்
    - I. உள்ளூராட்சி மறுசீரமைப்பு அலகு
    - II. முறைப்பாடு மற்றும் தகவல் அலகு
04. நிருவாகப் பிரிவு
05. மாகாண சபைகள் பிரிவு
06. உள்ளூராட்சிப் பிரிவு
07. அபிவிருத்திப் பிரிவு
08. செயற்றிட்டக் கண்காணிப்புப் பிரிவு
    - I. செயற்றிட்டக் கண்காணிப்பு அலகு
    - II. தகவல் தொழில்நுட்ப அலகு
09. திட்டமிடல் பிரிவு
10. சட்டப் பிரிவு
11. நிதிப் பிரிவு
12. செலவுக் கண்காணிப்புப் பிரிவு
13. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு
14. தேசிய திண்மக் கழிவு முகாமைத்துவ ஆதரவு மத்திய நிலையம்
15. உள்நாட்டுக் கடன்கள் அபிவிருத்தி நிதியம் (LLDF)
16. உள்ளூர் ஆளுகைக்கான இலங்கை நிறுவகம் (SLILG)
17. ஊடகப் பிரிவு

1.5 அமைச்சுடன் இணைந்து பணியாற்றும் நிறுவனங்கள்/ நிதியங்கள்

I. இலங்கை அரசாங்கம் (GOSL)

II. உலக வங்கி (WB)

III. ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB)

IV. ஐரோப்பிய யூனியன் (EU)

V. ஐரோப்பிய முதலீட்டு வங்கி (EIB)

VI. ஜப்பான் சர்வதேசக் கூட்டுத்தாபன முகவராண்மை (JICA)

VII. ஐக்கிய இராச்சியம்

VIII. நெதர்லாந்து

IX. அவுஸ்திரியா

1.6 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் பற்றிய விபரங்கள் (ஏதேனுமிருப்பின்)

நடைமுறையிலுள்ள 15 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு.

இல	செயற்றிட்டத்தின் பெயர்	நன்கொடை முகவரண்மை	செயற்றிட்டத்தின் முன்மதிப்பீடு செய்யப்பட்ட செலவு ரூ. மில்	செயற்றிட்டத்தின் காலப்பகுதி
1	பாரிய கொழும்பு கழிவுநீர் முகாமைத்துவச் செயற்றிட்டம்(GCWWMP)	ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB)	14,657.00	2010 செப்- 2020 டிச
2	பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சி (GCWWMIIP) பகுதி 2	ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB)	1,396.00	2016 செப் - 2020 யூன்
3	பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சி (GCWWMIIP) பகுதி 3	ஐரோப்பிய முதலீட்டு வங்கி (EIB) ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB)	26,953.00	2016 நவ - 2020 டிச
4	உள்ளூர் ஆளுகை மேம்பாட்டுத் துறைச் செயற்றிட்டம் (புரநெகும) – மேலதிக நிதியளிப்பு	ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB)	10,184.00	2017 ஏப் - 2021 டிச
5	618 கிராமிய பாலங்களின் நிருமாணம்	ஐக்கிய இராச்சியம் (UK)	22,600.00	2014 டிச - 2019 செப்
6	250 கிராமிய பாலங்களின் நிருமாணம்	ஐக்கிய இராச்சியம் (UK)	11,163.98	2018 - 2020
7	490 கிராமிய பாலங்களின் நிருமாணம்	நெதர்லாந்து	16,500.00	2014 டிச - 2019 செப்
8	230 கிராமிய பாலங்களின் நிருமாணம்	நெதர்லாந்து	10,356.73	2018 - 2020
9	அடிப்படை சுகாதார முறை வலுப்படுத்தல் செயற்றிட்டம் (PSSP)	உலக வங்கி (WB)	23,852.00	2018 - 2023
10	பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சி (GEM)	உலக வங்கி (WB)	15,505.00	2018 ஏப் - 2024 யூன்

இல	செயற்றிட்டத்தின் பெயர்	நன்கொடை முகவரண்மை	செயற்றிட்டத்தின் முன்மதிப்பீடு செய்யப்பட்ட செலவு ரூ. மில்	செயற்றிட்டத்தின் காலப்பகுதி
11	வளர்ந்து வரும் பிரதேசத்தில் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டம் (RIDEP)	ஜப்பான் சர்வதேசக் கூட்டுத்தாபன முகவராண்மை (JICA)	21,186.00	2017 யூலை- 2021 டிச
12	போக்குவரத்துத் தொடர்பு மற்றும் சொத்து முகாமைத்துவச் செயறறிட்டம்- மாகாண வீதி அபிவிருத்திச் செயற்றிட்டம் (TCAMP-PRDP)	உலக வங்கி (WB)	17,802.00	2019 மே - 2023 மார்
13	நகர செயற்றிட்டத் தயார்படுத்தல் வசதி (SHSDP)	ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB)	890.00	2019 - 2022
14	உள்நாட்டு அபிவிருத்தி ஆதரவுச் செயற்றிட்டம் (LDSP)	உலக வங்கி (WB)	17,947.00	2019 - 2022
15	தீயணைப்பு உபகரணங்களை வழங்குதல்	அவுஸ்திரியா	2,037.91	2019 சன- 2020 டிச

அத்தியாயம் 02 – முன்னேற்றம் மற்றும் எதிர்காலப் பார்வை

விசேட சாதனைகள்:

அமைக்கப்பட்ட இலக்குக்கு அமைவாக 2019 டிசம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறான ஒட்டுமொத்த நிதி முன்னேற்றத்தின் சதவீதம்.

2019 ஆம் ஆண்டிற்கான மொத்த ஒதுக்கம்	=	ரூபா. 20,182,750.00
2019 ஆம் ஆண்டிற்கான உண்மையான செலவு	=	ரூபா. 7,929,617.00
நிதிச் சாதனையின் சதவீதம்	=	39.28%

2019 ஆம் ஆண்டில் உள்நாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் செயலாற்றல் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது

இல	செயற்றிட்டத்தின் பெயர்	நிதி இலக்கு 2019/ரூபா (மில்லியன்)	நிதிச் செயலாற்றல்/ரூபா (மில்லியன்)	பௌதீக முன்னேற்றம்
1	திண்மக் கழிவு முகாமைத்துவச் செயற்றிட்டம்	1215.00	400.99	9 பொப்கெட் இயந்திரங்கள் மற்றும் 9 கழிவுநீர்த் தாங்கிகள் வழங்கப்பட்டன
2	ஈ எல்ஜீ(e LG) செயற்றிட்டம்	106.25	9.61	20 % முடிவடைந்துள்ளது
3	பின்தங்கிய உள்ளூர் அதிகார சபைகளுக்கான அபிவிருத்தி உதவிகள் - வருமானம் உழைக்கும் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துதல்	170.00	16.21	2 % முடிவடைந்துள்ளது
4	புதிதாக உருவாக்கப்பட்ட உள்ளூர் அதிகார சபைகளில் உட்கட்டமைப்பினை மேம்படுத்துதல்	35.00	32.82	100% முடிவடைந்துள்ளது
5	கழிவுநீர் அமைப்பு உட்கட்டமைப்பு அபிவிருத்தி – கொழும்பு மாநகர சபை சங்கிரி –லா ஹோட்டல் செயற்றிட்டத்திற்கு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்	400.00	299.36	100% முடிவடைந்துள்ளது
6	கிராமப் புறங்களில் 1000 கிலோமீற்றர் வீதியினை அபிவிருத்தி செய்தல்	375.00	351.62	69 வீதிகள், 02 மதகுகள், 01 தடுப்புச் சுவர் என்பன அமைக்கப்பட்டன
7	பிரதேச சபைகளை வலுப்படுத்தல் (மீண்டெழும்)	1200.00	161,89	294 வீதிகள், 56 கால்வாய்கள், 31 பொது மலசலகூடங்கள், 26 வாராந்த சந்தைகள், 20 சிறுவர் பூங்காக்கள், 24

இல	செயற்றிட்டத்தின் பெயர்	நிதி இலக்கு 2019/ரூபா (மில்லியன்)	நிதிச் செயலாற்றல்/ரூபா (மில்லியன்)	பௌதீக முன்னேற்றம்
				குடிநீர் திட்டங்கள், 4 பொது வாசிகசாலைகள், 1 மதகு என்பன அமைக்கப்பட்டன
8	உள்ளூர் அதிகாரசபைகளை வலுப்படுத்தல் (மூலதனம்)	825.00	161.89	132 வீதிகள், 3 கால்வாய்கள், 3 தடுப்புச் சுவர்கள், 1 விளையாட்டு மைதானம், 1 வாராந்த சந்தை மற்றும் 1 பொது மலசலகூடம் என்பன அமைக்கப்பட்டன
9	யாத்திரிகள் விடுதிகளை நிறுவுதல் (4 சௌகரிய மத்திய நிலையங்களை நிருமாணித்தல்)	75.00	7.50	50 % முடிவடைந்துள்ளுத
10	உள்ளூர் அதிகாரசபை வாசிகசாலை அபிவிருத்தி	20.63	8.50	100% முடிவடைந்துள்ளது
11	மட்டக்களப்பு மாநகரசபையின் பொது நூலகக் கட்டட நிருமாணம்	85.00	0.14	-
12	‘‘அம்மாச்சி’’ எண்ணக்கருவினை நடைமுறைப்படுத்தல்	19.30	16.81	100 % முடிவடைந்துள்ளது
13	உள்ளூர் அதிகார சபைகளுக்குக் குப்பை சேகரிக்கும் காம்பெக்டர்களை வழங்குதல்	1280.00	-	100 காம்பெக்டர்கள் வழங்கப்பட்டன
14	யுனிசெப் நிதியளிக்கப்பட்ட நிகழ்ச்சி	50.00	35.92	-
15	உள்ளூர் அதிகார சபைகளுக்குத் தரவுத் தளமொன்றை நிறுவுதல்	2.50	உள்ளூர் அதிகார சபைகளுக்குத் தரவுத் தளமொன்றை நிறுவுதல்	-

மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக சனாதிபதி செயலகத்தின் பல்வேறு வகையான விசேட அபிவிருத்தித் திட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு நிதி வழங்கப்பட்டது. அவையாவன,

1. உணவு உற்பத்தித் திட்டம்
2. சிறுவர் பாதுகாப்புத் திட்டம்
3. விசேட தேவையுடையோரை வலுப்படுத்துதல் மற்றும் முதியோர் சமூகத் திட்டம்
4. நிலைபேண்தகு பாடசாலை அபிவிருத்தித் திட்டம்
5. சூழல் பாதுகாப்புத் திட்டம்
6. தேசிய போதைப்பொருள் தடுப்பு வாரம்

திறந்த அரசாங்கப் பங்காண்மையின் தேசிய செயல் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் மேல் மாகாணத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு பிரதேச சபைகளில் குடிமக்களின் பங்களிப்புடன் உள்ளூராட்சி மன்றங்களின் சட்டப் பின்னணியை நிறுவுவதற்கான ஒரு முன்னோடித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டில், நாட்டின் எந்தவொரு உள்ளூராட்சி அதிகாரசபையாவது வழங்கிய சேவைகளில் திருப்தியடையாதவிடத்து, பொதுமக்களால் மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகளை ஏற்றுத் தீர்வு காண்பதற்காக உள்ளூராட்சிப் பிரிவுடன் இணைந்ததாக ஒரு விசாரணை பிரிவு நிறுவப்பட்டுள்ளது. இதன் விளைவாக, இதுபோன்ற 642 முறைப்பாடுகள் பொருத்தமான மாகாணங்களுக்கு பொருத்தமான தீர்வுகளை வழங்குமாறு ஆற்றுப்படுத்தப்பட்டன. அத்துடன், அவற்றுக்கான தீர்வுகளைப் பெறுவதற்காக முறையே 12 மனுக்கள் மற்றும் 6 மனுக்கள் பொது மனுக்கள் குழு மற்றும் ஆலோசனைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அரசியலமைப்பின் கீழ் /புதிய உள்ளூராட்சி அதிகாரசபைகளை மேமபடுத்துவதற்காக, 2019 ஆம் ஆண்டின் முற்பகுதியில், நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களை மீளாய்வு செய்வதற்கும் தேவையான மாற்றங்களுக்கான பரிந்துரைகளை வழங்குவதற்கும் வழிமுறைகளை வழங்குவதறகுமாக மாகாண அளவிலான கூட்டங்கள் தொடங்கப்பட்டன. தற்போது, இந்த அமைச்சினால் பரிந்துரைக்கப்பட்ட முன்மொழிவுகள் பெறப்படுகின்றன.

உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு வருமானத்தை உருவாக்கும் திட்டத்தை செயல்படுத்துவதற்கு உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியமானது (LLDF) 2019 ஆம் ஆண்டில் ரூபா .652.83 மில்லியன் பெறுமதியான 17 கடன் வசதிகளை வழங்கியுள்ளது.

இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகமானது (SLILG) மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவன அதிகாரிகளுக்காக 293 உள்நாட்டுப் பயிற்சி / செயலமர்வுகளை நடத்தியதுடன், மேற்கண்ட பயிற்சி / செயலமர்வுகளுக்கு 11,614 அதிகாரிகள் பங்கேற்றனர். அத்துடன், அமைச்சின் பல்வேறு பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் 43 அதிகாரிகள் 2019 ஆம் ஆண்டில் வெளிநாட்டுப் பயிற்சியில் பங்கேற்றனர். இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தின் (SLILG) ஆராய்ச்சி பிரிவானது 2019 ஆம் ஆண்டில் மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி அதிகாரசபைக்கும் இடையிலான உறவு எனப்படும் ஆய்வுகளை நடத்தியுள்ளது. இரு ஆய்வுகளினதும் வரைவு அறிக்கைகள் தயாராகவுள்ளன.

2019 ஆம் ஆண்டில் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் செயலாற்றல் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது

இல	செயற்றிட்டத்தின் பெயர்	நிதி இலக்கு 2019/ரூபா (மில்லியன்)	நிதிச் செயலாற்றல் /ரூபா (மில்லியன்)	பௌதீக முன்னேற்றம்
1	பாரிய கொழும்பு கழிவுநீர் முகாமைத்துவச் செயற்றிட்டம் (GCWWMP)	1500.00	1445.84	ஒட்டுமொத்தம் - 83.7%
2	பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சி (GCWWMIIP) பகுதி 2	500.00	355.25	ஒட்டுமொத்தம் - 31%
3	பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சி (GCWWMIIP) பகுதி 3	2800.00	1247.54	ஒட்டுமொத்தம் - 26.5%
4	உள்ளூர் ஆளுகை மேம்பாட்டுத் துறைச் செயற்றிட்டம் (புரநெகும) –	2676.20	2352.24	1சுகாதார நிலையம் 1 சந்தைப்படுத்தல்

இல	செயற்றிட்டத்தின் பெயர்	நிதி இலக்கு 2019/ரூபா (மில்லியன்)	நிதிச் செயலாற்றல் /ரூபா (மில்லியன்)	பௌதீக முன்னேற்றம்
	மேலதிக நிதியளிப்பு			நிலையம், 1 வாராந்த சந்தை, 2 பொது நூலகங்கள், 1 கேட்போர்கூடம் மற்றும் 6 உள்ளூர் அதிகாரசபை அலுவலகங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
5	கிராமிய பாலங்களின் நிருமாணம் (2 மற்றும் 2C ம் கட்டம்)	675.80	389.38	48 பாலங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன
6	கிராமிய பாலங்களின் நிருமாணம் (3 மற்றுமு 3C ம் கட்டம்)	1625.33	206.53	71 பாலங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன
7	அடிப்படை சுகாதார முறை வலுப்படுத்தல் செயற்றிட்டம் (PSSP)	1380.00	1145.00	2019 இல் முன்னேற்றம் - 5% ஒட்டுமொத்தம் - 5%
8	பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சி (GEM)	1680.00	-	-
9	வளர்ந்து வரும் பிரதேசத்தில் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டம் (RIDEP)	980.00	318.08	2019 இல் முன்னேற்றம் – 5% ஒட்டுமொத்தம் – 7%
10	போக்குவரத்துத் தொடர்பு மற்றும் சொத்து முகாமைத்துவச் செயறறிட்டம்- மாகாண வீதி அபிவிருத்திச் செயற்றிட்டம் (TCAMP-PRDP)	520.00	100.70	2019 இல் முன்னேற்றம் - 2% ஒட்டுமொத்தம் – 2%
11	நகர செயற்றிட்டத் தயார்படுத்தல் வசதி (SHSDP)	300.00	52.22	2019 இல் முன்னேற்றம் - 60% ஒட்டுமொத்தம் – 60%
12	உள்நாட்டு அபிவிருத்தி ஆதரவுச் செயற்றிட்டம் (LDSP)	300.00	282.40	1582 வார்ட்டு மட்டத் தேவை மதிப்பீட்டுத் திட்டங்கள் மற்றும் 134 உள்ளூர் அதிகாரசபைப் பங்கேற்பு அபிவிருத்தித் (LAPDPs) திட்டங்கள் உருவாக்கப்பட்டன
13	தீயணைப்பு உபகரணங்களை வழங்குதல்	350.00	-	2019 இல் முன்னேற்றம் - 35% ஒட்டுமொத்தம் – 35%

சவால்கள்:

2019 ஆம் ஆண்டில் அமைச்சின் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிப் பிரிவின் கீழ் செயல்படுத்தப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளின் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு எதிர்பார்த்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட திட்டங்களுக்கான ஒதுக்கீடு இல்லாமை காரணமாகப் பாதிக்கப்பட்டது.

எதிர்கால இலக்குகள்

i. உள்ளூராட்சிப் பிரதேச சபையை வலுப்படுத்துவதன் மூலம் பிரதேச சபையின் சமூக உள்கட்டமைப்பிற்காக செலவிடப்படும் ஆண்டு பராமரிப்பு செலவை 50% இனால் குறைத்தல்

ii. கிராமப்புறங்களில் 1000 கிலோமீற்றர் வீதி நீளம் கொண்ட திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் இலங்கையில் கிராமப்புற வீதி வலையமைப்பின் மொத்த நீளத்தின் 1.2% அபிவிருத்தி செய்தல்

iii. உள்ளூராட்சி அதிகாரசபைகளை வலுப்படுத்துவதற்கான திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் உள்ளூராட்சி அதிகாரசபைகளின்வருமானத்தை 10% இனால் அதிகரித்தல்

iv. உள்ளூராட்சி அதிகாரசபைகளின் நூலகத் திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம் இலங்கையில் உள்ளூராட்சி பிரதேசத்திலுள்ள 30% ஆன பொது நூலகங்களைத் தானியங்கவைத்தல்.

v. நாட்டில் வளர்ந்து வரும் நாள்பட்ட நிறுநீரக நோய் விகிதத்தைக் குறைத்தல் மற்றும் புரநெகும திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் பாதிக்கப்படக்கூடிய குழுக்களின் ஆயுட்காலத்தை அதிகரித்தல்.

vi. அடையாளம் காணப்பட்ட கிராமப்புற வீதிகளை மேம்படுத்தி அபிவிருத்தி செய்தல், குடிநீரை வழங்குதல் மற்றும் கிராமப்புற உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் (RIDEP') மூலம் சிறிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசன உள்கட்டமைப்புகளை மேம்படுத்துதல்.

vii. 10,000 வீடுகளுக்கு பாதுகாப்பான குடிநீர் இணைப்புகளை நிறுவுதல்.

viii. TCAMP திட்டத்தால் வீதி வலையமைப்பை மேம்படுத்துவதன் மூலம் மாகாணத்திற்குள் உள்ளக உறவை மேம்படுத்துதல்.

ix. அடிப்படை சுகாதார சேவைகளின் பயன்பாடு மற்றும் தரத்தை அதிகரித்தல்.

x. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களிலுள்ள உள்ள அதிகாரிகளின் அறிவு, திறன்கள் மற்றும் அனுபவங்களை மேம்படுத்துதல்.

xi. நிறுவனங்களின் முக்கிய வணிகத்தை மேம்படுத்துதல் மற்றும் வருவாய் உருவாக்கும் திட்டங்கள் மூலம் உள்ளூராட்சி அதிகாரசபையின் நிதித் திறனை வலுப்படுத்துதல்.

xii. கிராமப்புற பாலங்கள் திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் இயக்கத்தை அதிகரித்தல் மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.

xiii. LDSP திட்டத்தின் மூலம் சமூகங்களுக்கு சேவையை வழங்க உள்ளூராட்சி அதிகாரசபைகளின் திறன்களை வலுப்படுத்துதல்.

xiv. உள்ளூராட்சி அதிகாரசபைகளின் நிர்வாக பகுதிகளில் திண்மக் கழிவுகளை முகாமை செய்தல்.

ஒப்பம் : பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்

திகதி : 2020/02/22

S. Hettiarachchi
Secretary
Ministry of Public Administration, Home Affairs
Provincial Council & Local Government
No. 330, Union Place,
Colombo 02.

அத்தியாயம் 03 – ஆண்டிற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றல்

3.1 நிதிச் செயலாற்றல் கூற்று

ACA -F

2019 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதிச் செயலாற்றல் கூற்று

ரூபா

வரவுசெலவுத் திட்டம் (நடப்பாண்டு)		குறிப்பு	உண்மையானது நடப்பாண்டு	உண்மையானது முன்னைய ஆண்டு	
-	**பெற்றுக்கொண்ட வருமானங்கள்**		-	-	
-	வருமான வரி	1	-	-	ACA-1
-	உள்நாட்டுப் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரிகள்	2	-	-	ACA-1
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	ACA-1
-	வரியல்லாத வருமானம் மற்றும் ஏனையவை	4	-	-	
-	**பெற்றுக்கொண்ட மொத்த வருமானம் (A)**		-	-	
-	**வருமானமல்லாத பெறுகைகள்**		-	-	
-	திறைசேரி முற்பணங்கள்		206,135,048,550	188,807,144,488	ACA-3
-	வைப்புக்கள்		115,766,741	296,684,039	ACA-4
-	முற்பணக் கணக்குகள்		11.929,282	13,109,349	ACA-5/5(a)
-	ஏனைய பெறுகைகள்		86,542,529	51,546,050	
-	**ஏனைய வருமானமல்லாத பெறுகைகள் (B)**		**206,349,287,103**	**189,168,483,926**	
-	**மொத்த வருமானபட பெறுகைகளும் வருமானமல்லாத பெறுகைகளும் C = (A)+(B)**		**206,349,287,103**	**189,168,483,926**	
	கழிக்க: செலவுகள்				
-	**மீண்டெழும் செலவினங்கள்**		**-**	**-**	
-	கூலிகள், சம்பளங்கள், ஏனைய ஊழியர் நன்மைகள்,	5	159,076,348	146,443,556	ACA-2(ii)
-	ஏனைய பொருட்களும்	6	93,339,585	99,652,515	ACA-2(ii)

	சேவைகளும்				
-	மானியங்களும், பெறுகைகளும் ஏனைய மாற்றல்களும்	**7**	200,911,590	676,697,756	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	**8**	-	-	
-	ஏனைய மீண்டெழும் செலவினங்கள்	**9**	30,000	50,000	
-	**மொத்த மீண்டெழும் செலவினங்கள் (D)**		**453,357,523**	**922,843,827**	
	மூலதனச் செலவினங்கள்				
-	மூலதன சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு	**10**	6,700,590	14,850,061	
	மூலதன சொத்துக்களைக் கையகப்படுத்தல்	**11**	1,539,628	5,824,842	
-	மூலதன இடமாற்றங்கள்	**12**	754,186,674	2,087,955,389	**ACA-2(ii)**
-	நிதிச் சொத்துக்களைக் கையகப்படுத்தல்	**13**	335,307,126	309,355,433	
-	இயல்திறன் விருத்தி	**14**	1,654,430	1,785,486	
-	ஏனைய மூலதனச் செலவினங்கள்	**15**	6,376,870,734	11,719,867,708	
-	**மொத்த மூலதனச் செலவினங்கள (E)**		**7,476,259,180**	**14,139,638,919**	
	பிரதான பேரேட்டுச் செலவினம் (F)		**218,731,650**	**155,569,915**	
	வைப்புக் கொடுப்பனவுகள்		199,222,093	136,179,909	**ACA-4**
	முற்பணக் கொடுப்பனவுகள்		19,509,558	19,390,006	**ACA-5/5(a)**
	மொத்தச் செலவினங்கள்G = (D+E+F)		**8,148,348,354**	**15,218,052,661**	
-	**…….. டிசம்பர் 31 இல் உள்ளவாறான முற்பண மீதி H = (C-G)**		**198,200,938,749**	**173,950,431,265**	

3.2 முற்பணச் சீராக்கல் கூற்று

முற்பணச் சீராக்கல் கூற்று

ரூபா.

இந்தத் திணைக்களத்திற்காக ஏனைய விடயத் தலைப்புக்களில் சேகரிக்கப்பட்ட பணம்		-	**இந்தத் திணைக்களத்திற்காக ஏனைய விடயத் தலைப்புக்களிலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்ட பணம்**		
			முற்பணம்B Dr(.012)	4,027,051	
			நேரடிக் கொடுப்பனவு	5,027,176,771	
ஏனைய தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள்			**ஏனைய தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட பணம்**		
முற்பணம்B – Cr(012)	2,849,455			-	
மாகாண சபைகளுக்கும் ஏனைய நிறுவனங்களுக்குமான கொடுப்பனவு	203,216,593,100				
பிரதான பேரேட்டுக் கொடுப்பனவு			**பிரதான பேரேட்டுப் பெறுகைகள்**		
				-	
			வரவேண்டிய முற்பணக் கணக்கு.		198,188,238,733
		203,219,442,555			203,219,442,555

வரவேண்டிய முற்பணக் கணக்கு ரூபா.

		நிதிச் செயலாற்றலின்படி மீதி	198,200,938,748.91
முற்பணச் சீராக்கல் கணககு	198,188,238,733.34		
.20….. .12.31 திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட்ட முற்பண மீதி	12,700,015.57		
	198,200,938,748.91		198,200,938,748.91

3.3 நிதி நிலைமைக்கான கூற்று

ACA-P

நிதி நிலைமைக்கான கூற்று
2019 டிசம்பர் 31 ஆம் திகதிஉள்ளவாறானது

	குறிப்பு	உண்மையானது நடப்பாண்டு ரூபா	முன்னையஆண்டு ரூபா
நிதி அல்லாத சொத்துக்கள்			
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்	**ACA-6**	510,937,219.88	509,397,592.00
நிதிச்சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	**ACA-5/5(a)**	46,176,422.38	38,596,147.00
காசும் காசையொத்தவையும்	**ACA-3**	-	-
மொத்த சொத்துக்கள்		**557,113,642.26**	**547,993,739.00**
தேறிய சொத்துக்கள்/ உரிமையாண்மை			
திறைசேரிக்கான தேறிய பெறுமதி		(168,079,121.51)	(259,114,749.00)
ஆதனம், பொறி மற்றும் உபகரண ஒதுக்கங்கள்		510,937,219.88	509,397,592.00
வாடகை மற்றும் வேலை முற்பண ஒதுக்கம்	**ACA-5(b)**		
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக்கள் கணக்கு	**ACA-4**	214,255,543.89	297,710,895.60
முற்பண மீதி	**ACA-3**	-	-
மொத்த பொறுப்புக்கள்		**557,113,642.26**	**547,993,738.60**

மேலே உள்ள ACA வடிவத்தில் விரிவான கணக்கீட்டு அறிக்கைகள் எண் 1 முதல் 6 வரை பக்கங்களில் வழங்கப்படுகின்றன இந்த நிதிநிலை அறிக்கைகளுக்கு இன்றியமையாத பாகமாகிய குறிப்புக்கள் பக்கம் ……….. முதல் …… வரையிலான பக்கங்களில் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிதிக் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ள அதேசமயம் மிகவும் பொருத்தமான கணக்கியல் கொள்கைகள் நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி பயன்படுத்தப்படுகின்றன, மேலும் இந்த இறுதி அறிக்கைகள், கணக்குகளுக்கான குறிப்புகள் மற்றும் பிற தொடர்புடைய கணக்குகளில் உள்ள புள்ளிவிவரங்கள் உடன்பாட்டில் காணப்படும் கணக்குகளின் திறைசேரிப் புத்தகங்களுடன் இணக்கமடையச் செய்யப்பட்டுள்ளதாகவும் இத்தால் சான்றுப்படுத்தப்படுகின்றது.

S. Hettiarachchi
Secretary
Ministry of Public Administration, Home Affairs
Provincial Council & Local Government
No. 330, Union Place,
Colombo 02.

M.W.A.R.P. Wijesinghe
Chief Financial Officer
Ministry of Internal & Home Affairs and
Provincial Councils & Local Government
No. 330, Union Place, Colombo 02.

திகதி: 2020/02/22

3.4 காசுப் பாய்ச்சல் கூற்று **ACA-C**

2019 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மையானது	
	நடப்பாண்டு ரூபா	முன்னைய ஆண்டு ரூபா
<u>**செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்**</u>		-
மொத்த வரிப்பெறுகைகள்	-	-
கட்டணங்கள், அபராதங்கள், தண்டப்பணங்கள் மற்றும் உரிமங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானமல்லாத பெறுகைகள்	59,548,240	52,607,654
ஏனைய செலவின தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்		
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	206,135,048,550	189,051,220,873
செயற்பாட்டிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தப் பணம் (a)	**206,194,596,790**	**189,103,828,527**
<u>**கழிக்க – வழங்கப்பட்ட காசு:**</u>		
தனிப்பட்ட ஊதியங்களும் செயற்பாட்டுக் கொடுப்பனவுகளும்	285,113,356	5,490,660,553
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	141,574,164	136,179,909
ஏனைய நிறுவனங்களுக்கான கட்டு நிதி	468,339,333	
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	202,617,474,280	183,466,663,082
நிதிக் கிரயம் - திறைசேரிக்குத் தீர்ப்பனவு செய்யப்பட்ட முற்பணம்	12,700,016	1,191,275
செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (b)	**203,525,201,150**	**189,094,694,819**
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல் (C)=(a)-(b)	**2,669,395,640**	**9,133,708**
<u>**முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்**</u>		
வட்டி	-	-

பங்கிலாபங்கள்	-	-
கையுதிர்ப்பு வருமானம் மற்றும் பௌதீகச் சொத்துக்களின் விற்பனை	121,705	-
கடன் மீட்டெடுப்புக்கள்	-	-
முற்பணங்களிலிருந்து அறவிடப்பட்டவை	1,164,105	10,042,696
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு(d)	**1,285,810**	**10,042,696**
<u>**கழிக்க – வழங்கப்பட்ட காசு:**</u>		
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்து நிருமாணம் மற்றும் கையகப்படுத்தல்	2,494,931,879	
ஏனைய முதலீடுகள்	15,482,507	19,176,404
முற்பணக் கொடுப்பனவுகள்	**2,510,414,385**	**19,176,404**
முதலீட்டு நடவடிக்கைகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (e)	**(2,509,128,576)**	
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்கள் (F)=(d)-(e)		**(9,133,708)**
செயற்பாட்டு மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்கள் (g)=(c) + (f)	**160,267,064**	**-**
<u>**நிதியீட்ட நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்**</u>		
உள்நாட்டுக் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
கிடைத்த மானியங்கள்	24,008,893	-
நிதியீட்ட நடவடிக்கைகளிலிருந்து உழைக்கப்பட்ட மொத்தக்காசு_(h)	**24,008,893**	**-**
<u>***கழிக்க – வழங்கப்பட்ட காசு:***</u>		
உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	
வெளிநாட்டுக் கடன் மீள்செலுத்தல்கள்	-	-
வைப்புக் கணக்குகள் மற்றும் ஏனைய பொறுப்புக்களில் மாற்றங்கள்	184,275,957	-
நிதியீட்ட நடவடிக்கைகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (i)	**184,275,957**	**-**
<u>**நிதியீட்ட நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்கள் (J)=(h)-(i)**</u>	**(160,267,064)**	**-**
தேறிய காசு நகர்வு (k) = (g) -(j)	**-**	**-**
சனவரி 01 ஆம் திகதியிலிருந்தவாறான ஆரம்பக் காசு மீதி	**-**	**-**

டிசம்பர் 31ஆம் திகதியிலிருந்தவாறான இறுதிக் காசு மீதி	-	-

3.5 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

இது இணைப்பு 2 உடன் இணைக்கப்பட்டுள்ளது

3.6 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

ரூபா ,000

வருமானக் குறியீடு	வருமானக் குறியீடு பற்றிய விவரணம்	வருமான முன்மதிப்பீடு		சேகரிக்கப்பட்ட வருமானம்	
		ஆரம்ப	திருத்திய	தொகை (ரூபா.)	திருத்திய வருமான முன்மதிப்பீட்டின் சதவீதமாக %
-	-	-	-	-	-

3.7 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டினது செயலாற்றல்

ரூபா. ,000

ஒதுக்கீட்டின் வகை	ஒதுக்கீடு		உண்மையான செலவு	திருத்திய ஒதுக்கீட்டின் சதவீதமாக% ஒதுக்கீட்டுப் பயன்பாடு
	ஆரம்ப	திருத்திய		
மீண்டெழுதல்	1,511,050	1,510,550	453,358	30%
மூலதனம்	17,907,000	18,672,200	7,476,259	40%

3.8 நிதியல்லாத சொத்துக்களின் அறிக்கையிடலின் செயலாற்றல்

ரூபா. ,000

சொத்துக் குறியீடு	குறியீட்டின் விவரணம்	.2019.12.31 ஆம் திகதிய இருப்புக் கணக்கெடுப்புச் சபை அறிக்கையின் படி மீதி	2019.12.31 ஆம் திகதிய நிதி நிலைமை அறிக்கையின் படி மீதி	இன்னும் கணக்கிடப்பட வேண்டியது	அறிக்கையிடல் செயலாற்றல் சதவீதமாக %
9151	கட்டடங்களும் கட்டமைப்புக்களும்	10,000	10,000		
9152	இயந்திரங்களும் உபகரணங்களும்	493,937	493,937		
9153	காணி	7, 000	7,000		
9154	கட்புலனாகாச் சொத்துக்கள்	-	-		
9155	உயிரியல் சொத்துக்கள்	-	-		
9160	நடைமுறை வேலை	-	-		
9180	குத்தகைச் சொத்துக்கள்	-	-		

3.9 கணக்காய்வாளர் தலைமையதிபதி அவர்களின் அறிக்கை**

** கணக்காய்ாளர் தலைமையதிபதி அவர்களால் வழங்கப்பட்ட இறுதிக் கணக்காய்வு அறிக்கைகள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகையில் ஸ்கேன் பண்ணப்பட்டு இணைக்கப்பட வேண்டும்.

அத்தியாயம் 04 – செயலாற்றல் குறிகாட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றல் குறிகாட்டிகள் (செயல்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டது)

தொ .இ	விசேட குறிகாட்டிகள்	எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகளின் (%) ஆக உண்மையான வெளியீடு		
		100%- 90%	75%- 89%	50%- 74%
1	மாகாண மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபை மட்டத்தில் நடத்தப்பட்ட இயல்திறன் மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் பயிற்சி பெற்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளின் எண்ணிக்கை	**100**		
2	உள்நாட்டு சேவை மேம்பாட்டிற்கான அமைச்சின் வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் மானிய வசதிகளைப் பெற்ற உள்ளூர் அதிகார சபைகளின் (உள்ளூர் அதிகார சபைப் பிரதேசங்கள்) எண்ணிக்கை	**100**		
3	அமைச்சினால் வருடாந்த ஒதுக்கீட்டைப் பயன்படுத்துவதற்கான சதவீதம்			**39.28**
4	‘‘திண்மக் கழிவு முகாமைத்துவ செயல் திட்டங்களை’’ சேகரித்தல் / உரம் தயாரித்தல் / மீள்சுழற்சி...) தயாரித்து நடைமுறைப்படுத்தும் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் எண்ணிக்கை		**80**	
5	‘‘குறை தீர்க்கும் பொறிமுறையை’’ நன்கு நிறுவி செயல்படுத்தும் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் எண்ணிக்கை	**100**		
6	உள்ளூராட்சி அதிகாரசபைகளில் பொது பயன்பாடுகளின் மேம்பாட்டுக்கு வழங்கப்பட்ட கடன் வசதிகளின் எண்ணிக்கை			**56**
7	உள்ளூராட்சி அதிகாரசபையிலிருந்து கடன் மீட்டெடுக்கும் சதவீதம்	**92.25**		
8	நடாத்தப்பட்ட பிரதான செயலாளரின் கூட்டங்களின் எண்ணிக்கை		**75**	
9	வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட திட்டத்திற்கேற்ப நடத்தப்பட்ட தேசிய வழிநடத்தல் குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை		**75**	
10	நடத்தப்பட்ட ஆராய்ச்சிகள் / கற்கைகள் மற்றும் மதிப்பீடுகளின் எண்ணிக்கை	**90**		

அத்தியாயம் 05- நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதிலுள்ள செயலாற்றல் (SDG)

5.1 அடையாளங்காணப்பட்ட தொடர்புடைய நிலையான அபிவிருத்தி இலக்குகளை சுட்டிக்காட்டுதல்

பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளின் எண்ணிக்கையும் குறிகாட்டிகளும் தொகைமதிப்புப் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட "இலங்கையில் நிலையான அபிவிருத்தி இலக்குகளின் குறிகாட்டிகளின் நிலை -2017" இனை அடிப்படையாகக் கொண்டதாகும். மேலும், அடிப்படைத் தரவுகள் காணப்படாமையால் சாதனையின் முன்னேற்றத்தை எம்மால் அளவிட முடியாதுள்ளது.

தொடரிலக்கம்	நோக்கங்கள் / குறிக்கோள்	இலக்கு	சாதனைகளின் குறிகாட்டிகள்	இன்றுவரை சாதனையின் முன்னேற்றம்		
				0%-49%	50%-74%	75%-100%
1	**நோக்க இல. 1** எல்லா இடங்களிலும் வறுமையை அதன் எல்லா வடிவங்களிலும் முடிவுக்குக் கொண்டுவரல்	**1.5**	**1.1.1,** **1.2.1,**			
2	**நோக்க இல. 2** பசியை முடிவுக்குக் கொண்டு, உணவுப் பாதுகாப்பு மற்றும் மேம்பட்ட ஊட்டச்சத்தை அடைதல் மற்றும் நிலையான விவசாயத்தை ஊக்குவித்தல்	**2.1,** **2.2,** **2.3,** **2.4,** **2.a**	**8.3.1**			
3	**நோக்க இல. 3** ஆரோக்கியமான வாழ்வை உறுதிசெய்து, எல்லா வயதிலுள்ள அனைவருக்கும் நல்வாழ்வை மேம்படுத்துதல்	**3.4,** **3.8,** **3.9,** **3.b**	**2.2.1,** **3.1.1,**			
4	**நோக்க இல. 4** உள்ளடக்கிய மற்றும் சமமான தரமான கல்வியை உறுதிசெய்து	**4.1,** **4.a,** **4.c**	**4.1.1,** **4.a.1,** **4.c.1**			

தொடரிலக்கம்	நோக்கங்கள் / குறிக்கோள்	இலக்கு	சாதனைகளின் குறிகாட்டிகள்	இன்றுவரை சாதனையின் முன்னேற்றம்		
				0%-49%	50%-74%	75%-100%
	அனைவருக்கும் வாழ்நாள் முழுவதும் கற்றல் வாய்ப்புகளை ஊக்குவித்தல்					
5	**நோக்க இல 5** பாலின சமத்துவத்தை அடைதல் மற்றும் அனைத்து பெண்கள் மற்றும் சிறுமியர்களுக்கு அதிகாரமளித்தல்	**5.5, 5.c**				
6	**நோக்க இல 6** அனைவருக்கும் நீர் மற்றும் சுகாதாரத்தின் கிடைப்பனவு மற்றும் நிலையான முகாமைத்துவத்தை உறுதி செய்தல்	**6.1, 6.3, 6.b**	**6.1.1**			
7	**நோக்க இல 9** நெகிழ்ச்சியான உள்கட்டமைப்பை உருவாக்குதல், உள்ளடக்கிய மற்றும் நிலையான கைத்தொழில்மயமாக்கலை ஊக்குவித்தல் மற்றும் புத்தாக்கத்தை வளர்த்தல்	**9.1, 9.c**				
8	**நோக்க இல 10** நாடுகளுக்குள்ளும் நாடுகளுக்கு இடையிலும் சமத்துவமின்மையைக் குறைத்தல்	**10.2**	**1.4.1**			
9	**நோக்க இல 11** நகரங்களையும் மனித குடியிருப்புகளையும் உள்ளடக்கிய, பாதுகாப்பான, நெகிழ்வான மற்றும் நிலையானவையாக மாற்றவும்	**11.2, 11.6, 11.7, 11.a**	**10.7.2, 12.4.2**			

தொடரிலக்கம்	நோக்கங்கள் / குறிக்கோள்	இலக்கு	சாதனைகளின் குறிகாட்டிகள்	இன்றுவரை சாதனையின் முன்னேற்றம்		
				0%-49%	**50%-74%**	**75%-100%**
10	**நோக்க இல 12** நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தி வடிவங்களை உறுதிப்படுத்தல்	**12.4, 12.5**	**1.5.3**			

5.2 நிலையான அபிவிருத்தி இலக்குகளின் சாதனைகள் மற்றும் சவால்களைச் சுருக்கமாக விளக்குதல்

இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள் தொடர்பாக அடிப்படைத் தரவுகள் இல்லாததால், அமைச்சினால் சாதனையின் முன்னேற்றத்தை அளவிட முடியாதுள்ளது.

அத்தியாயம் 06 - மனிதவள விவரம்

6.1 ஆளணி முகாமைத்துவம்

	அங்கீகரிக்கப்பட்ட ஆளணி	தற்போதுள்ள ஆளணி	வெற்றிடங்கள் / (மிகை)**
சிரேஷ்ட	35	25	10 / 2**
பிரதேச	4	2	2
இரண்டாம் நிலை	151	108	43
அடிப்படை	63	56	7

6.2 மனிதவளப் பற்றாக்குறை அல்லது மிகையானது நிறுவனத்தின் செயலாற்றலை எவ்வாறு பாதித்துள்ளது என்பதற்கான சுருக்கமான விளக்கம்

அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் காணப்படும் பற்றார்க்குறை செயற்றிறன் மிக்க பணியினைச் செய்வதில் தாக்கத்தில் உண்டுபண்ணிய போதிலும் தற்போதுள்ள ஆளணியினரைக் கொண்டு இலக்குகளை அடைவதற்கான முன்னெடுப்புக்கள் முகாமை செய்யப்படுகின்றன் குறைக்கிறது. எனவே அவர்கள் எதிர்பார்த்த மட்டத்தை எட்டத் தவறுவதானது நிறுவனத்தின் செயலாற்றலைப் பாதிக்கின்றது.

6.3 பணியாளரின் இயல்திறனை அபிவிருத்தி செய்தல்

நிகழ்ச்சியின் பெயர்	பயிற்றப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை	நிகழ்ச்சியின் காலஎல்லை	மொத்த முதலீடு (ரூபா மில்லியன்)		நிகழ்ச்சியின் தன்மை (வெளிநாட்டு / உள்நாட்டு)	வெளியீடு/பெற்றுக்கொண்ட அறிவு*
			உள்நாட்டு	வெளிநாட்டு		
மீள்சுழற்சிக் கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் கழிவு முகாமைத்துவக் கொள்கை	01	2019.01.13 – 2019.01.19		$240	வெளிநாட்டு	சிறந்த அறிவு பெற்றுக்கொள்ளப்பட்டது
அரசியல் மற்றும் சிவில் சமூகத்தில் பெண்கள்	01	2019.04.22 – 2019.05.10		$920	வெளிநாட்டு	சிறந்த அறிவு பெற்றுக்கொள்ளப்பட்டது
சென். பேர்டிலிடி கம்பனிக்கு தாவரங்களைப் பார்வையிடுவதற்கான விஜயம்	01	2019.04.19 – 2019.04.21		$120	வெளிநாட்டு	சிறந்த அறிவு பெற்றுக்கொள்ளப்பட்டது
JICA அறிவு இணை-உருாக்கத் திட்டம் உள்ளூர் ஆளுகை	01	2019.05.21 – 2019.06.29		$1200	வெளிநாட்டு	சிறந்த அறிவு பெற்றுக்கொள்ளப்பட்டது
2ஆம் சீனா – தெற்காசிய கூட்டுத்தாபன மன்றம்	01	2019.06.09 – 2019.06.14		$450	வெளிநாட்டு	சிறந்த அறிவு பெற்றுக்கொள்ளப்பட்டது
ஆசிய உள்ளூராட்சி அதிகாரிகளுக்கான வேலைவாய்ப்புக் கொள்கையில் அழைப்பு இயல்திறன் கட்டியெழுப்புதல் திட்டம்	01	2019.06.08 – 2019.06.23		$600	வெளிநாட்டு	சிறந்த அறிவு பெற்றுக்கொள்ளப்பட்டது
இயந்திரமயமாக்கப்	01	2019.07.26 –		$450	வெளிநாட்டு	சிறந்த அறிவு

நிகழ்ச்சியின் பெயர்	பயிற்றப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை	நிகழ்ச்சியின் காலஎல்லை	மொத்த முதலீடு (ரூபா மில்லியன்)		நிகழ்ச்சியின் தன்மை (வெளிநாட்டு / உள்நாட்டு)	வெளியீடு/பெற்றுக்கொண்ட அறிவு*
			உள்நாட்டு	வெளிநாட்டு		
பட்ட ‘‘திருகு வகை’’ சேதனத் தாவரப் (RA - X) பரிசோதனை		2019.07.31		$742		பெற்றுக்கொள்ளப்பட்டது
மேலும் ‘மக்கள் மைய’ முதன்மை சுகாதார முறைமையாக மாறுவதற்கு உதவும் கோஸ்டாரிகாவுடனான அறிவுப் பரிமாற்றம்	01	2019.09.06 – 2019.09.16		$440	வெளிநாட்டு	சிறந்த அறிவு பெற்றுக்கொள்ளப்பட்டது
இலங்கைக்கான பெல்ட் மற்றும் வீதி நிருமாணம் மற்றும் அடைவு	02	2019.10.10 – 2019.10.30		$880	வெளிநாட்டு	சிறந்த அறிவு பெற்றுக்கொள்ளப்பட்டது
சுற்றுச்சூழல் சமநிலை மற்றும் பொருளாதாரத்தில் நகரங்களை மிகவும் வாழக்கூடிய திறன் நகரங்களாக மாற்றுதல்	01	2019.10.28 – 2019.10.31		$240	வெளிநாட்டு	சிறந்த அறிவு பெற்றுக்கொள்ளப்பட்டது
உள்ளூராட்சிப் பரிமாற்ற மற்றும் ஒத்துழைப்புக் கருத்தரங்கு 2019	01	2019.12.15 – 2019.12.21		$280	வெளிநாட்டு	சிறந்த அறிவு பெற்றுக்கொள்ளப்பட்டது

அத்தியாயம் 07– இணக்க அறிக்கை

இல.	பொருந்தக்கூடிய தேவை	இணக்க அறிக்கை (இணங்குகின்றது/ (இணங்கவில்லை)	இணங்காமைக்கான சுருக்கமான விளக்கம்	எதிர்காலத்தில் இணங்காமையைத் தவிர்ப்பதற்கான முன்மொழியப்பட்ட திருத்த நடவடிக்கைகள்
1	**பின்வரும் நிதிந அறிக்கைகள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன**			
1.1	வருடாந்த நிதிக் கூற்றுக்கள்	இணங்குகின்றது		
1.2	பகிரங்க அலுவலர் கணக்குகளுக்கான முற்பணம்	இணங்குகின்றது		
1.3	வர்த்தக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வணிக முற்பணக் கணக்குகள்)	-		
1.4	களஞ்சிய முற்பணக் கணக்குகள்	-		
1.5	களஞ்சிய முற்பணக் கணக்குகள்	-		
1.6	ஏனையவை	-		
2	**புத்தகங்களையும் பதிவேடுகளையும் பராமரித்தல் (FR445)**			
2.1	நிலையான சொத்துப் பதிவேடு பராமரிக்கப்பட்டு பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் அடிப்படையில் புதுப்பிக்கப்படுகிறது 267/2018	இணங்குகின்றது		
2.2	தனிப்பட்ட ஊதிய பதிவேடு / தனிப்பட்ட ஊதிய அட்டைகள் பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளன	இணங்குகின்றது		
2.3	கணக்காய்வு விசாரணைகளுக்கான பதிவேடு பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டது	இணங்குகின்றது		
2.4	அனைத்து மாத கணக்கு சுருக்கங்களும் (CIGAS) தயாரிக்கப்பட்டு உரிய தேதியில் திறைசேரிக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றன	இணங்குகின்றது		

2.5	காசோலைகள் மற்றும் பணக் கட்டளைகளுக்கான பதிவேடு பராமரிக்கப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டுள்ளது	இணங்குகின்றது		
2.6	இருப்புப் பதிவேடு பராமரிக்கப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டுள்ளது	இணங்குகின்றது		
2.7	களஞ்சியப் பதிவேடு பராமரிக்கப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டுள்ளது	இணங்குகின்றது		
2.8	நட்டங்களுக்கான பதிவேடு பராமரிக்கப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டுள்ளது	இணங்குகின்றது		
2.9	பொறுப்பேற்புப் பதிவேடு பராமரிக்கப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டுள்ளது	இணங்குகின்றது		
2.10	கவுண்டர்பொயில் புத்தகங்களின் பதிவேடு (GA - N20) பராமரிக்கப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டுள்ளது	இணங்குகின்றது		
03	**செயற்பாடுகளையும் நிதிக் கட்டுப்பாடுகளையும் ஒப்படைத்தல் (FR 135)**			
3.1	நிறுவனத்திற்குள் நிதி அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது	இணங்குகின்றது		
3.2	நிதி அதிகார ஒப்படைப்பானது நிறுவனத்தினுள் தொடர்பாடப்பட்டுள்ளது	இணங்குகின்றது		
3.3	ஓவ்வொரு கொடுக்கல்வாங்கலும் இரண்டு அதற்கு மேற்பட்ட அலுவலர்களினூடாகச் செல்லும வகையில் அதிகாரமானது ஒப்படைக்கப்பட்டுள்ளது	இணங்குகின்றது		
3.4	அரசாங்க ஊதிய மென்பொருள் தொகுப்பைப் பயன்படுத்துவதில்..2014.05.11. ஆம் திகதிய அரசாங்கக் கணக்கு சுற்றறிக்கை 171/2004 இன் அடிப்படையில் கணக்காளர்களால் இந்த கட்டுப்பாடு பின்பற்றப்பட்டுள்ளது.	இணங்குகின்றது		

4	**வருடாந்தத் திட்டங்களைத் தயாரித்தல்**			
4.1	வருடாந்த செயல்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது	இணங்குகின்றது		
4.2	வருடாந்த பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது	இணங்குகின்றது		
4.3	வருடாந்த முன்மதிப்பீடு தயாரிக்கப்பட்டு உரிய திகதியில் தேசிய வரவுசெவுத் திட்டத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.	இணங்குகின்றது		
4.4	வருடாந்த காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டு உரிய திகதியில் திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.	இணங்குகின்றது		
5	**கணக்காய்வு விசாரணைகள்**			
5.1	அனைத்து கணக்காய்வு விசாரணைகளுக்கும் குறிப்பிட்ட நேரத்திற்குள் கணக்காய்வாளர் நாயகம் பதிலளித்தார்	இணங்குகின்றது		
6	**உள்ளகக் கணக்காய்வு**			
6.1	நிதி ஒழுங்குவிதி 134 (2) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் ஆண்டின் தொடக்கத்தில் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.	இணங்குகின்றது	-	-
6.2	அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாத காலப்பகுதியினுள் பதிலளிக்கப்பட்டுள்ளன.	இணங்குகின்றது	-	-
6.3	அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின்பிரிவு 40 (14) இன் படி முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	இணங்குகின்றது	-	-
6.4	உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் அனைத்து பிரதிகளும் நிதி ஒழுங்குவிதி 134 (3) இன் அடிப்படையில் கணக்காய்வாளர்	இணங்குகின்றது	-	-

	நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.			
7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**			
7.1	சுற்றறிக்கை 1/2019 இன் படி ஆண்டினுள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் குறைந்தபட்ச 04 கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன	இணங்குகின்றது	-	-
8	**சொத்து முகாமைத்துவம்**			
8.1	சொத்து முகாமைத்துவச் சுற்றறிக்கை இல 01/2017 இன் பந்தி 07 இன் படி சொத்துக்கள் மற்றும் அகற்றல்கள் பற்றிய தகவல்கள் கட்டுப்பாட்டாளர் நாயக அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.	இணங்குகின்றது		
8.2	சுற்றறிக்கையின் விதிமுறைகளை அமல்படுத்துவதற்கு ஒரு பொருத்தமான தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டார் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட அதிகாரியின் விவரங்கள் மேற்கூறிய சுற்றறிக்கையின் 13 வது பந்தியின் படி கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டன.	இணங்குகின்றது		
8.3	பொருள் கணக்கெடுப்பு சபைகள் நடத்தப்பட்டு தொடர்புடைய அறிக்கைகள் உரிய தேதியில் பொது நிதி சுற்றறிக்கை எண் 05/2016 இன்படி கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டன.	இணங்குகின்றது		
8.4	கணக்கெடுப்பு சபை மற்றும் பிற தொடர்புடைய பரிந்துரைகள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட அதிகப்படியான மற்றும் பற்றாக்குறைகள், சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன	இணங்குகின்றது		
8.5	புறக்கணிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் நிபி 772 இன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது	இணங்குகின்றது		

9	**வாகன முகாமைத்துவம்**			
9.1	வாகனத் தொகுதியிலுள்ள வாகனங்களின் தினசரி இயங்கும் அட்டவணை மற்றும் மாதாந்த சுருக்கங்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் நாயகத்திற்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டன	இணங்குகின்றது		
9.2	புறக்கணிக்கப்பட்ட வாகனங்கள் புறக்கணிக்கப்பட்டு 6 மாதங்களுக்கும் குறைவான காலத்திற்குள் அகற்றப்பட்டன	இணங்குகின்றது		
9.3	வாகன பதிவுப் புத்தகங்கள் பராமரிக்கப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டன	இணங்குகின்றது	-	-
9.4	ஓவ்வொரு வாகன விபத்துக்கள் தொடர்பிலும் நிதிப் பிரமாணங்கள், 103,104, 109 மற்றும் 110 ஆகியவற்றினடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.	இணங்குகின்றது	-	-
9.5	.2016.12.29 இன் பொது நிர்வாக சுற்றறிக்கை இல 30/2016 இன் பந்தி 3.1 இன் விதிகளின் அடிப்படையில் வாகனங்களின் எரிபொருள் நுகர்வு மீண்டும் சோதனை செய்யப்பட்டுள்ளது.	இணங்குகின்றது		
9.6	குத்தகைக்கு விடப்பட்ட வாகன பதிவு புத்தகங்களின் முழுமையான உரிமை குத்தகை காலத்திற்குப் பிறகு மாற்றப்பட்டுள்ளது	இணங்குகின்றது		
10	**வங்கிக் கணக்குகளை முகாமைசெய்தல்**			
10.1	வங்கி இணக்க அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு, சான்றுறுதிப்படுத்தப்பட்டு உரிய திகதிக்குள் கணக்காய்வுத் தயாராக இருந்தன	இணங்குகின்றது		
10.2	மீளாய்வாண்டில் அல்லது முந்தைய ஆண்டுகளில் இருந்து வந்த செயலற்ற கணக்குகள் தீர்க்கப்பட்டன	இணங்குகின்றது		
10.3	வங்கி இணக்க கூற்றுகள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட மீதிகள் மற்றும் அதற்கான மாற்றங்கள் செய்யப்பட வேண்டியது தொடர்பான நிதி ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, மேலும்	இணங்குகின்றது		

	அந்த நிலுவைகளை ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்பட்டுள்ளன.			
11	**ஏற்பாடுகளின் பயன்பாடு**			
11.1	ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் எல்லையை மீறாமல் செலவிடப்பட்டன	இணங்குகின்றது		
11.2	நிபி 94 (1) இன் படி ஆண்டு இறுதியில் இருந்த விதிமுறைகளை மீறாத கடன்கள்	இணங்குகின்றது		
12	**பகிரங்க அலுவலர்கள் கணக்கிற்கான முற்பணங்கள்**			
12.1	வரையறைகள் இணங்குகின்றன	இணங்குகின்றது		
12.2	நிலுவைத் தொகையில் கடன்கள் குறித்து நேர பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது	இணங்குகின்றது		
12.3	ஒரு வருடத்திற்குமதிகமாக நிலுவையிலுள்ள கடன் மீதிகள் தீர்க்கப்பட்டன	இணங்குகின்றது		
13	**பொது வைப்புக் கணக்கு**			
13.1	இழந்த வைப்புத்தொகை அகற்றுவது தொடர்பாக நி.பி .571 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது	இணங்குகின்றது		
13.2	பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டு பதிவு இற்றைப்படுத்தப்பட்டு பராமரிக்கப்பட்டது	இணங்குகின்றது		
14	**முற்பணக் கணக்கு**			
14.1	மீளாய்வாண்டின் இறுதியில் பண புத்தகத்தில் உள்ள தொகை TOD க்கு அனுப்பப்பட்டது	இணங்குகின்றது		
14.2	நிதிப் பிரமாணங்கள் 371 இன் படி வழங்கப்பட்ட தற்காலிக துணை முற்பணங்கள் பணிகள் முடிந்த ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்பட்டன.	இணங்குகின்றது		
14.3	நிதிப் பிரமாணங்கள் 371 படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறி தற்காலிக துணை இம்ப்ரெஸ்ட்கள் வழங்கப்பட்டன.	இணங்குகின்றது		
14.4	முற்பணக் கணக்கின் இருப்பு மாதந்தோறும் திறைசேரிப் புத்தகங்களுடன் இணக்கம் செய்யப்பட்டது	இணங்குகின்றது		
15	**வருமானக் கணக்கு**			
15.1	வருவாயிலிருந்து பணத்தைத் திரும்பப்பெறுதல் விதி முறைகளின் அடிப்படையில் செய்யப்பட்டது	இணங்குகின்றது		
15.2	வருமானச் சேகரிப்பானது வைப்புக் கணக்கில் வரவு	இணங்குகின்றது		

	வைக்கப்படாமல் நேரடியாக வருமானக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது			
15.3	நிபி.176 இன் அடிப்படையில் வருமான நிலுவைத் தொகையானது கணக்காளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டது	இணங்குகின்றது		
16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட பணியாளர தொகைக்குள் ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டது	இணங்குகின்றது	-	-
16.2	ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் எழுத்துப்பூர்வமாக கடமை பட்டியல் வழங்கப்பட்டுள்ளது	இணங்குகின்றது	-	-
16.3	All reports have been submitted to MSD in terms of their circular no.04/2017 dated 20.09.2017 அனைத்து அறிக்கைகளும் 2017.09.20 தேதியிட்ட அவர்களின் சுற்றறிக்கை இல .04 / 2017 இன் அடிப்படையில் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன	இணங்குகின்றது	-	-
17	**பொதுமக்களுக்குத் தகவல்களை வழங்குதல்**			
17.1	ஒரு தகவல் அலுவலர் நியமிக்கப்பட்டு, தகவல் அறியும் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறை ஆகியவற்றின் அடிப்படையில் சரியான தகவல்களின் பதிவு பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்படுகிறது	இணங்குகின்றது	-	-
17.2	நிறுவனம் அல்லது பொதுமக்களுக்கு தகவல் வலைத்தளம் அல்லது மாற்று நடவடிக்கைகள் மூலம் வழங்கப்பட்டுள்ளது, மேலும் இந்த வலைத்தளம் அல்லது மாற்று நடவடிக்கைகளால் பொது அதிகாரசபைக்கு எதிராக பொதுமக்களுக்கு பாராட்ட / குற்றச்சாட்டுகளை வழங்க வசதி செய்யப்பட்டுள்ளது.	இணங்குகின்றது	-	-
17.3	தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரிவு 08 மற்றும் 10 ன் படி இரு ஆண்டு	இணங்குகின்றது	-	-

	மற்றும் ஆண்டறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன			
18	**குடிமக்கள் சாசனத்தை நடைமுறைப்படுத்தல்**			
18.1	ஒரு குடிமக்கள் சாசனம் / குடிமக்கள் வாடிக்கையாளரின் சாசனமானது பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கை இல 05/2008 மற்றும் 05/2018 (1) ஆகியவற்றின் அடிப்படையில் நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது.	இணங்குகின்றது	-	-
18.2	சுற்றறிக்கையின் பந்தி 2.3 இன் படி குடிமக்கள் சாசனம் / குடிமக்கள் வாடிக்கையாளரின் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயல்படுத்துதல் ஆகியவற்றைக் கண்காணிப்பதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் ஒரு பொறிமுறையை நிறுவனம் உருவாக்கியுள்ளது.	இணங்கவில்லை	எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும்	-
19	**மனிதவளத் திட்டத்தைத் தயாரித்தல்**			
19.1	2018.01.04 தேதியிட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இல 02/2018 இன் இணைப்பு 02 இல் உள்ள மாதிரியின் அடிப்படையில் ஒரு மனித வளத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.	இணங்கவில்லை	2019 ஆம் ஆண்டு சுற்றறிக்கையின்படி பயிற்சித் திட்டங்கள் நடத்தப்படவில்லை	2020 ஆம் ஆண்டு சுற்றறிக்கையின்படி பயிற்சித் திட்டங்களை நடத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன
19.2	ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கும் குறையாத குறைந்தபட்ச பயிற்சி வாய்ப்பு மேற்கூறிய மனிதவள திட்டத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளது			
19.3	மேற்கூறிய சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் உள்ள வடிவமைப்பின் அடிப்படையில் முழு ஊழியர்களுக்கும் வருடாந்த செயலாற்றல் ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன			

19.4	ஒரு சிரேஷ்ட அதிகாரி நியமிக்கப்பட்டு, மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்தல், திறன் மேம்பாட்டுத் திட்டங்களை ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்கண்ட சுற்றறிக்கையின் இல 6.5 இன் படி திறன் மேம்பாட்டுத் திட்டங்களை நடத்துதல் ஆகியவற்றின் பொறுப்ப ஒப்படைக்கப்பட்டது	இணங்கவில்லை		
20	**கணக்காய்வுப் பந்திகளுக்கான பதில்**			
20.1	முன்னைய ஆண்டுகளுக்கான கணக்காளர் நாயகம் வழங்கிய கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் சரிசெய்யப்பட்டுள்ளன	இணங்குகின்றது		